## இலக்கணம் மாறுதோ…………….

ப. பரமதேவன்,
விஞ்ஞான பீடம்

ஆனந்த மயமான அந்தக் காட்டில் பெரும் பரபரப்பு என்றுமே ஆனந்தமாகவும், அமைதியாகவும் இருந்த அந்தக் காட்டில் வசித்துவரும் பிராணிகளிடையே ஒரு பரபரப்பு. சுதந்திரமாகத் திரிந்த பிராணிகளிடையே ஒருவிதப் பீதி. தாய்ப்பிராணிகள் பயத்துடன் ஒலியெழுப்பி தங்களின் குட்டிகளைத் தேடியலைகின்றன. குரங்குகள் தங்களின் குட்டிகளைக் கட்டிக்கொண்டு உயர்ந்த மரக்கிளைகளை நோக்கி தாவி ஓடுகின்றன. சிறுபறவைகள் ஒலியெழுப்பி பதற்றத்துடன் பறந்து செல்கின்றன. மொத்தத்தில் ஆனந்த மயமாக இருந்த அந்தக்காடு இன்று அல்லோல கல்லோலப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இவற்றுக்கெல்லாம் மூலகாரணமாக இருந்தது அந்த நரி கூறிய ஒரு விடயமே.

### வளம்கொழிக்கும் வனம்

பச்சைப்பசேல் என்று சொல்வதற்கு உதாரணமாக அந்த வனத்தின் அழகைக் கூறினால் மிகையாகாது. அந்த அளவிற்கு இயற்கை அந்த வனத்துக்கு வளத்தினை தாராளமாக அள்ளிச் சொரிந்து கொண்டு இருக்கின்றது. காய்களும், கனிகளும், பூக்களுமாய் அந்த வனம் என்றுமே செழிப்புடன் காணப்படும். தேனீக்களும், வண்ணத்துப் பூச்சிகளும் சிறுபறவைகளும் ஏன் சிறு பிராணிகளும் கூட அனைத்துமே ஆனந்தமாகவும், சுதந்திரமாகவும் வாழும் வனம் அது. பருவ காலத்தில் அங்கிருக்கும் காட்டு மரங்கள் பூத்துக் குலுங்குவதும், அந்தப் பூக்களின் நறுமணமும், அவற்றில் தேன் உண்ண வரும் தேனீக்கள் மற்றும் சிறு பூச்சிகளின் ரீங்காரமும் அந்த வனம் ஆனந்தமாய் இருப்பதற்கான அடையாளமாய் இருக்கின்றன. அணில், முயல், குரங்கு முதலிய தாவரவுண்ணிகள் மட்டுமே வாழ்ந்து வந்த வனம். தேவைக்கு அதிகமான வளங்கள் காணப்படுவதனால் அவற்றிற்கிடையில் போட்டி இல்லை, பொறாமை இல்லை. வேறெந்த மாமிச உண்ணிகளும் அந்தக் காட்டை அண்டாதவாறு ஒற்றுமையாக பாதுகாத்து வந்தன அங்கிருக்கும் தாவரவுண்ணிகள்.

### நரியின் சிறுபராயம்

அந்தப்பிராணிகளுடன் ஒன்றுடன் ஒன்றாக எங்கிருந்தோ வந்த ஒரு நரிக்குட்டியும் சிறு பராயத்திலிருந்தே வளர்ந்து வருகின்றது. அதனை எந்தவித வேறுபாடுமின்றி,

தங்களுள் ஒன்றைப் போலவே எண்ணி அந்தப் பிராணிகளும் கூடிப் பழகி வந்தன. பசுவுடன் சேர்ந்த புலியும் புல் தின்னுமாம் போல் இந்த நரிக்குட்டியும் அந்தக் காட்டில் சிறு பராயத்திலிருந்தே அக்காட்டில் கிடைக்கும் பழங்களையும் இலைகளையும் மட்டும் உண்டு களித்து சுறுசுறுப்பான ஒரு பிராணியாக வளர்ந்து வந்தது. மற்றைய பிராணிகளிடம் இல்லாத இயற்கையான தந்திரக் குணத்தினாலும், தலைமைத்துவப் பண்புகளாலும் நரியின் செல்வாக்கு பிராணிகளிடையே அதிகரித்துக் கொண்டிருந்தது. இதனால் பிராணிகளிடையே ஏற்படும் சிறு பிரச்சினைகளுக்குக் கூட தீர்வு காண்பதற்கு அவை நரியின் உதவியை நாடின. காலப்போக்கில் அவை நரியினையே தங்கள் கூட்டத்தின் தலைவனாக ஏற்றுக்கொண்ட பிராணிகள், நரியின் யோசனைப்படியே நடக்கத் தொடங்கின.

**<u>நரியின் கபடம்</u>**

நரியும் வளர வளர அதனது சுயரூபம் சிறிது சிறிதாக வெளிப்படத் தொடங்கியது. அதற்கு இந்த அப்பாவிச் சிறு பிராணிகளை வேட்டையாடி உண்ணும் எண்ணம் ஏற்படத் தொடங்கியது. ஆனால் அது உடனடியாக தனது எண்ணத்தை நடைமுறைப்படுத்தாமல் அதற்குப் பொருத்தமான தருணத்தை எதிர்பார்த்து காத்திருந்தது. தனது எண்ணம் எப்போதாவது இந்தப் பிராணிகளுக்கு தெரிய வந்தால் இக்காட்டில் தன் செல்வாக்கு குறைந்து தன்னை வெறுக்கத் தொடங்கிவிடும் என எண்ணியது. அதனால் அவை அறியாமலேயே தனது திட்டத்தினை நிறைவேற்றுவதில் உறுதியாக இருந்தது.

**<u>சிங்கத்துடன் ஒப்பந்தம்</u>**

சற்று தொலைவில் மற்றுமொரு காட்டில் வயது முதிர்ந்த சிங்கம் ஒன்று, தன்னால் இனிமேலும் மற்றைய மிருகங்களை துரத்திப் பிடித்து வேட்டையாடி தனது உணவுத் தேவையினைப் பூர்த்தி செய்யமுடியாத நிலையில் இருக்கின்றது. தனக்கு மேலும் வயதுசெல்லும் போது, தனது இறுதிக் காலத்தில், தனது கூட்டத்தில் இருந்த தனக்கு மூத்த சிங்கங்களுக்கு ஏற்பட்டது போல், தன்னையும் தனது கூட்டத்திலேயே இருக்கும் இளம் சிங்கங்கள் கடித்துக் குதறி கொன்றுவிடும். இறுதியில் தனது உடல் காட்டு நாய்களுக்கும் நரிகளுக்குமே உணவாகப் போகும். இது காட்டில் நிகழும் சர்வ சாதாரண நிகழ்வொன்றாயினும், தனக்கு விரைவில் அந்த நிலை ஏற்படப்போவதை எண்ணி பயந்து கொண்டு இருக்கின்றது.

நரி தனது தந்திரக் குணத்தினால் அந்த வயதில் முதிர்ந்த சிங்கம் வசிக்கும் காட்டிலிருக்கும் நரிகளுடன் பழக்கத்தினை ஏற்படுத்தி அவற்றிற்குத் தெரியாமலேயே அவற்றின் மூலம் இந்த சிங்கத்தினைப் பற்றிய விடயங்களை அறிந்துகொண்டது. இந்த சிங்கத்தினை வைத்தே தனது திட்டத்தினை நிறைவேற்ற நரி தந்திரமாக செயற்பட்டது. எப்படியாவது இந்த கிழட்டு சிங்கத்தை தனது காட்டிற்குள் கூட்டி வந்தால் தனது திட்டம் சுலபமாக நிறைவேறிவிடும். அதே நேரம் தான் ஏற்படுத்தியிருந்த நற்பெயருக்கும் களங்கம் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தது. பழம் நழுவி பாலுக்குள் விழுமாம் போல் ஒரு நாள் நரி செல்லுலும் வழியில் அந்த சிங்கமே இந்த நரியைக் கண்டு துரத்தத் தொடங்கியது. நிலைமையைப் புரிந்து கொண்ட நரி சிங்கத்தை விட மிக வேகமாக ஓடியது. அது ஓடும் போது பின்னால் சிங்கம் ஓடுவதற்கு மிகவும் சிரமப்பட்டு தன்னைத் துரத்துவதைக் கண்டதும் ஓட்டத்தை நிறுத்தி சிங்கத்துடன் பேசியது. உனக்கோ வயது சென்றுவிட்டது. எவ்வளவு ஓடினாலும் என்னை மட்டுமல்ல உன்னால் எந்தப் பிராணியையும் பிடிக்கமுடியாது. நீ இறுதிக் காலத்தை நெருங்குகின்றாய். மேலும் எனது கூட்டத்தில் இருக்கும் மற்றைய நரிகள் கூட உனது பலவீனத்தை அறிந்துவிட்டன. அவை உன்னை வேட்டையாடுவதற்கு தீர்மானித்துவிட்டன. எனவே நான் உனக்கு ஒரு வழி சொல்வுகின்றேன். அதற்கு நீ உடன்பட்டால் மீண்டும் நீ ராஜாவாகவே வாழலாம். உனக்க தேவையான உணவு உன்னையே தேடி வரும்படி செய்கின்றேன் என்று சிங்கத்திற்கு உதவி செய்வது போல் ஆசை வார்த்தைகளை அள்ளி வீசியது. சிங்கமும் நரியின் யோசனைக்கு இணங்கியது. ஆனால் ஒரு நிபந்தனை, உனக்குக் கிடைக்கும் உணவின் ஒரு பகுதியை நீ எனக்குத் தர வேண்டும் என்று நரி கூறியது. சிங்கம் அதற்கும் உடன்பட்டதுடன் இரண்டும் தங்கள் காரியம் நிமித்தம் நண்பர்களாயின.

**<u>சிங்கத்தின் வருகை</u>**

சிங்கத்தை அழைத்துக் கொண்டு, நரி தனது காட்டுக்குள் வந்தது. தனது சக பிராணிகளை அழைத்து ஒரு கூட்டம் நடத்தியது. அதில் நமது காட்டுக்குள் சிங்கம் ஊடுருவி விட்டது. இனிமேல் நாங்கள் ஒவ்வொருவரும் இந்தச் சிங்கத்திற்கு இரையாகப் போவது உறுதி. நாங்களோ சிறிய பிராணிகள். இந்த சிங்கத்தின் பசியினைப் போக்குவதற்காக சிங்கம் வேட்டையாட எண்ணுமானால் நாங்கள் அனைவரும் ஒரு குறுகிய நாட்களுக்குள்ளேயே எங்களது உயிரை மாய்க்க வேண்டி ஏற்படும். அதனால் நான் உங்களுக்கு ஒரு புத்திமதி

சொல்கின்றேன். நாங்கள் எங்களுக்குள்ளேயே முடிவெடுத்து ஒரு நாளுக்கு ஒருவராக இந்தச் சிங்கத்திற்கு இரையாக வேண்டும். அப்படியானால்தான், பலியாகப் போகின்றவர்கள் போக மீதம் உள்ளவர்கள் தொல்லையில்லாமல் இன்னும் சிறிது காலம் வாழமுடியும். எனது இந்த ஆலோசனைக்கு நீங்கள் உடன்படுவதைத் தவிர உங்களுக்கு வேறு வழியில்லை என்று கூறியது. நரியின் இந்த யோசனையே அந்தப் பிராணிகளின் பரபரப்பிற்குக் காரணமாக அமைந்தது.

சிங்கத்திடமிருந்து தங்கள் உயிரைக் காப்பாற்றவும் முடியாமல், சிங்கத்தை எதிர்த்துப் போராட திராணியும் இல்லாமல், தாங்கள் சிங்கத்திற்கு உணவாகப் போவதை எண்ணி அந்தப் பிராணிகள் படும் அவஸ்தையினை கண்டு கொள்ளாதவாறு தனது சூழ்ச்சியினை நிறைவேற்றத் துடிக்கும் நரிதான் அப்பாவிப் பிராணிகளின் தலைவன்.

- ***யாவும் கற்பனையே*** -

"The most dangerous leadership myth is that leaders are born that there is a genetic factor to leadership. This myth asserts that people simply either have certain charismatic qualities or not. That's nonsense; in fact, the opposite is true. Leaders are made rather than born" **Warren Bennis**

"Of all crimes thathuman creatures are capable of committing, the most horrid and unnatural is ingratitude"

David Hume